**செய்தி வெளியீடு எண்:373** **நாள் : 21.07.2016**

**தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்,**
**தமிழ்நாடு அரசு**

**தொ**ழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், ( www.editn.in) தமிழ்நாடு அரசின் தன்னாட்சி சங்கமாக சிட்கோ தொழிற்பேட்டையில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு **2013**-14 ஆம் ஆண்டில் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக புதிய திட்டமான புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில்கள் மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) அறிவித்தது. இத்திட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் **2606** பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

வேலையில்லா இளைஞர்களுக்கு வேலை உருவாக்கும் திட்டம் (UYEGP), பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) மற்றும் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில்கள் மேம்பாட்டுத்திட்டம் (NEEDS) மூலம் கடன் பெறாதவர்களுக்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் தேவைப்படுகிறது. இதற்காக **22.07.2016** அன்று **10** முதல் **1** மணி வரை தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் பழைய கட்டிட வளாகம், திரு வி.க. தொழிற்பேட்டை, கிண்டி , சென்னை-32 ல் UYEGP. PMEGP மற்றும் NEEDS இதுவரை கடன் பெறாதவர்களுக்காக வங்கியாளர்களின் கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கனரா வங்கி, பாரத ஸ்டேட் வங்கி மற்றும் இந்தியன் வங்கி அலுவலர்கள் வருகை தரவுள்ளனர். ஆகவே, இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இதைப்பற்றி மேலும் தெரிந்து கொள்ள, திரு இ. பாஸ்கரன், துணை இயக்குநர், தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் அவர்களை மின்னஞ்சல்: ddp@editn.in, கைபேசி எண்: **8754590961** - ல் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**